**37. அந்தகக்கவி வீரராகவர் கதை**



இவர் ஏறக்குறைய முந்நூறாண்டுகட்குமுன் தொண்டை வளநாட்டிலே பொற்களத்தை என்னும் ஊரில் வேளாளர் குலத்தில், வடுகநாத முதலியார் என்பவருக்குப் புதல்வ ராகத் தோன்றினார். இளம் பருவத்திலேயே இவருடைய கண்கள்பார்வையிழந்தன. ஆயினும் வீரராகவர் தம்முடைய கூரிய அறிவின் திறத்தால் பல நூல்களையுங் கற்றுச் சிறந்தபுலவராகத் திகழ்ந்தார். கண்பார்வையோடு இருந்த மக்கட்கு உண்டா கிய புகழைக்காட்டிலும் இவருக்குப்பன்மடங்கு மிகுதியான புகழ் ஏற்பட்டது. இவர் சிலநூல்களும் இயற்றினார். இவருடைய பாடலைப் புகழ்ந்துஒருவர், "விரகன் முத்தமிழ் வீரராகவன் வரகவி மாலையை மதிக்கும் போதெலாம் உரகனும் வாணனும் ஒக்கக்கூடினால் சிரகர கம்பிதம் செய்யலாகுமே என்று பாராட்டிப் பாடியுள்ளார். எண்ணும் எழுத்துமே மக் களுக்குச்சிறந்த கண்களாகும். முகத்தில் உள்ள இரண்டு கண்கள் பயனற்ற புண்கள் என்னுஞ் செய்தி இப்புலவரி டத்தில்நன்கு அமைந்து விளங்கியது. "கற்றதனா லுங்கள் கவிவீரராகவ மால் வெற்றிபர ராசசிங்க மேன்மைசெயப்- பெற்றதனால் ஞாலமதிற் புன்னைவன நாதனே நற்பருவ காலமதில் நூல்பல கல்."

(ஆத்திசூடி வெண்பா) [கல்வி]